**சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம் - வாராந்த பாடசாலை**

Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

## கணிதம்

**தரம் 10** **வாரம் 45**

**அலகு : நிகழ்தகவு**

**இவ்வாரத்துள் பெற்றுக்கொள்ளக் கூடிய கற்றற்பேறுகள் :**

1. எளிய நிகழ்ச்சிகள், கூட்டு நிகழ்ச்சிகள் என்பவற்றை வேறுபடுத்தி அறிந்து கொள்வார்.
2. A என்பது S எனும் மாதிரிவெளியின் நிகழ்ச்சியாகவிருக்க, A நிகழ்தகவிற்கான நிகழ்தகவு $P(A) = \frac{n(A)}{n(S)}$ எனக் கூறுவார்.

**மாணவர் செய்ய வேண்டிய செயற்பாடுகள் :**

- கணிதம் பகுதி II பக்கம் 154 – 168 வரைஉள்ள விடயங்கள் தொடர்பில் சுய கற்றலில் ஈடுபடுக.
- அவற்றினூடு பின்வரும் சொற்களுக்கான விளக்கங்களை அறிந்து கொள்க.
    - எழுமாற்றுப் பரிசோதனை
    - மாதிரிவெளி
    - நிகழ்ச்சி
    - எளிய நிகழ்ச்சிகள்
    - கூட்டு நிகழ்ச்சிகள்
    - சம தகவுடைய பேறுகள்
- பாடப்புத்தகத்தின் பக்கம் 157, 158 இலுள்ள உதாரணங்களை நன்கு வாசித்து விளங்கிக் கொள்க.
- பாடப்புத்தகத்தின் பக்கம் 158, 159 இலுள்ள பயிற்சி 30.1 இற்கான விடைகளை எழுதுக.
- மேலதிக விளக்கங்களுக்காக கீழே தரப்புட்டுள்ள இணையத்தள இணைப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளவும்.
- இச்செயலட்டையின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள கணிப்பீட்டு வினாக்களுக்கு விடையளிக்க.
- அனைத்து வினாக்களுக்குமான விடைகளை உங்கள் பாட ஆசிரியரிடம் வழங்கி சரிபார்த்துக் கொள்க.

**மேற்படி செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய புத்தகங்கள், Website, LMS பாடம் கற்றல் உபகரணங்கள் :**

**ethaksalawa :** https://youtu.be/uLQ0CdJa6rk

**Youtube :** https://youtu.be/G55VBb5CcD8

https://youtu.be/j77pd5IZ78o

**கணிப்பீடு :**

01. 1 தொடக்கம் 6 வரை இலக்கமிடப்பட்ட தாயக்கட்டை ஒன்றினை ஒரு முறை மேலே எறியும் எழுமாற்றுப் பரிசோதனையில்
    I. மாதிர்வெளியனை எழுதுக.
    II. எளிய நிகழ்ச்சிகள் இரண்டு எழுதுக.
    III. கூட்டு நிகழ்ச்சிகள் இரண்டு எழுதுக.
02. 1 தொடக்கம் 4 வரை இலக்கமிடப்பட்ட நான்முகித் தாயக்கட்டை ஒன்றை ஒரு தடைவ மேலே எறியும் எழுமாற்றுப் பரிசோதனையில்
    I. மாதிரிவெளியினை எழுதுக.
    II. கீழே உள்ள நிகழ்ச்சிகளை மூலகங்களுடன் எழுதுக.
        a) A - {வர்க்க எண்}
        b) B - {முதன்மை எண்}
        c) C - {முக்ககோண எண்}
        d) D - {ஒற்றை எண்}
        e) E - {இரட்டை எண்}